## 20

# குறுந்தொகை

### குறிஞ்சி - தோழி கூற்று

**அகவன் மகளே அகவன் மகளே**
**மனவுக்கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்**
**அகவன் மகளே பாடுக பாட்டே**
**இன்னும் பாடுக பாட்டே அவர்**
**நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே**

**- ஔவையார்.**

**பொருள் :** தெய்வங்களை அழைத்துப் பாடும் கட்டுவிச்சியே! கட்டுவிச்சியே! சங்குமணிக் கோவை போன்ற வெண்மையான நல்ல நீண்ட கூந்தலையுடைய கட்டுவிச்சியே! நீ இப்பொழுது பாடிய பாட்டை மீண்டும் பாடுக. மேன்மேலும் அப்பாட்டைப் பாடுக. அவருடைய நல்ல நெடிய குன்றத்தைக் குறித்துப் பாடிய பாட்டை மீண்டும் பாடுவாயாக.

## 21

# புறநானூறு

**நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவ ராடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே.**

**- ஔவையார்.**

பொருள் : நிலனே! நீ ஒன்றில் நாடேயாக; ஒன்றிற் காடேயாக; ஒன்றில் பள்ளமேயாக; ஒன்றில் மேடேயாக; எவ்வாறாயினும் எவ்விடத்து நல்லர் ஆண்மக்கள் அவ்விடத்து நீயும் நல்லையல்லது, நினக்கென ஒரு நலமுடையையல்லை வாழி!



இலவச விநியோகத்திற்காக